# தேசிய விஞ்ஞான மன்றம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ரூபா 997,731 தொகை குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிநிலைமைக்கூற்றின் பிரகாரம் இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்ட புத்தகங்கள் அறிவித்தல் மற்றும் ஒளிப்பேழைகள் இருப்புக்களின் பெறுமதி ரூபா 2,973,545 ஆக இருந்த போதிலும் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 8,424,493 ஆக இருந்தது.

#### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | வழங்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள் | 370,000,000 | காணிகளின் உரித்துறுதிகள் |
| நிலையான சொத்துக்கள் (கட்டிடங்களைத் தவிர்த்து) | 91,889,626 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி இருப்பு | 4,263,546 | -மேற்படி- |
| உபகரண மானியம் | 5,004,103 | பட்டோலைகள் |

### 1.2.4 பெறவேண்டிய பணம்

ஆராய்ச்சிச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 859,201 தொகையான முற்பணம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

நிதி, திட்டமிடல் அமைச்சின் 2011 பெப்ரவரி 21 ஆந் திகதிய 449 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்திற்கு முரணாக 60 வயதுக்கு மேற்பட்ட மூன்று ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஆலோசனைச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,088,998 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 8,247,108 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,658,685 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 3,588,423 தொகையான வீழ்ச்சிக்காக அரசாங்க மானியம் ரூபா 07 மில்லியனால் அதிகரித்திருக்கும் போது மொத்தச் செலவினம் ரூபா 10 மில்லியனால் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(அ) நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உள்ளவாறான செயலாற்றல்களுக்கிடையேயான இணக்கமொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | பின்தொடர் நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்பப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட அளவு | பின்தொடர் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படாத ஆராய்ச்சிகள் | முன்கொண்டு வரக்கூடிய ஆராய்ச்சிகள் |
|---|---|---|---|---|
| 2010 | 42 | 39 | 03 | - |
| 2011 | 37 | 17 | 20 | 09 |

(ஆ) கடந்த சில வருடங்களில் பின்தொடர் நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்பப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட ஆராய்ச்சி அறிக்கை தொடர்பான பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி வெளியீடாக ஈடுபடுத்துதல் | பதிப்புரிமை விண்ணப்பிக்க க்கூடிய ஆராய்ச்சிகள் | வணிகச் செயற்திட்டமாக அபிவிருத்தி செய்ய முடியுமான ஆராய்ச்சிகள் | மேலும் ஆராய்ச்சி மேற்கொள்வத ற்காக அனுப்பக்கூடிய ஆராய்ச்சிகள் | ஆரம்பப் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செய்யமுடியுமான செயற்திட்டங்கள் | பதிப்புரிமை பெற்றுக் கொள்ளல் |
|---|---|---|---|---|---|---|
| 2008 | 15 | 01 | - | 10 | - | - |
| 2009 | 16 | 02 | 01 | 05 | 02 | - |
| 2010 | 02 | 02 | 03 | 02 | 05 | 02 |
| 2011 | 01 | 01 | - | 13 | 08 | - |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டின் போது உற்பத்திசெய்யப்பட்ட ரூபா 83,800 பெறுமதியான 797 மிஹிமடல இறுவெட்டுக்கள் களஞ்சியத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) தேவைகள் உரிய வகையில் இனங்காணப்படாது புத்தகங்கள் அச்சிடப்பட்டமையால் ரூபா 8,424,493 தொகையான விநியோகிக்கப்படாத 12,394 புத்தகங்கள் களஞ்சியத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

### 3.3 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ தகவல் முறைமையை ஸ்தாபிப்பதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரியுடன் தேசிய விஞ்ஞான மன்றம் 2011 பெப்ரவரி 15 ஆந் திகதி ரூபா 2,999,000 தொகையான உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தது. 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அச்செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வட மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் உக்கிரமடைந்துள்ள சிறுநீரக நோய் ஏற்பட்டமைக்கான காரணங்களை இனங்காண்பது தொடர்பாக ஜப்பான் சுகாதார அமைப்பினால் இணைக்கப்பட்டுள்ள பின் ஆய்வு செயற்திட்டத்திற்காக ரூபா 70 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அதன் ஆராய்ச்சிப் பெறுபேறுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பின் ஆய்வு செயற்திட்டத்தின் நிதியத்தின் ஈடுபடுத்தல் தொடர்பாக உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வு அறிக்கை விஞ்ஞான மன்றத்திற்கு வழங்கப்படாதிருந்ததுடன் வெளியகக் கணக்காய்வு தொடர்பான தகவல்கள் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.4 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேசிய விஞ்ஞான மன்றத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக சேர்க்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட அமைச்சரின் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சரின் அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உதவி ஆசிரியர் பதவியிலுள்ள உத்தியோகத்தருக்கு 2011 மே 01 ஆந் திகதி தொடக்கம் சம்பளமாக ரூபா 675,395 தொகை தேசிய விஞ்ஞான மன்றத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சி மானியம்

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு